

மோனிகா

நவம்பர் 28, வாரம் 9

போலந்து



- ✓ அட்வென்டிஸ்ட் பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்வதுபற்றி மோனிகா ஒருபோதும் யோசித்ததே இல்லை. 2022ஆம் வருடத்தில், ஒரு திருமண விழாவில் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்த போதுதான், காம்பஸ் அட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்ற அவருக்கு விருப்பமா என்று அவர் கேட்டார்.
- ✓ அவ்வாறுதான் அந்தப் பயணம் எதிர்பாராமல் துவங்கியது. அவ்வாறு கேட்டதும், முழு நிச்சயத்தோடு பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் அவருக்கு வரலாற்றுப் பாடத்தின்மீது மிகுந்த ஆர்வம் இருந்தது; மேலும் வீட்டுக்கல்வி மூலம் தனது பிள்ளைகளுளுக்கு பாடம் நடத்திய அனுபவமும், அவ்வாறு வீட்டுக்கல்வி மூலம் தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்தின குடும்பத்தினருடன் சேர்ந்து பல ஆண்டுகள் கற்றுக்கொண்ட அனுபவமும் அவரிடம் இருந்தது.
- ✓ “பாடத்திட்டம்பற்றி எனக்கு நன்றாகத் தெரிந்திருந்தது, மேலும் சிறுவர்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள் என்பதையும் அறிந்திருந்தேன்” என்று சொன்னார். அவர் முயற்சி செய்து பார்க்க ஒப்புக்கொண்டார்.
- ✓ இன்று, மோனிகா 4 முதல் 8 ஆம் வகுப்பு வரை வரலாறு பாடம் நடத்துகிறார். மேலும் 5 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு வகுப்பாசிரியராகவும் உள்ளார்.



- ✓ மாணவர்கள் அடுத்தடுத்த வகுப்புகளுக்குச் செல்லும்போது அவரும் அந்த வகுப்புகளுக்கு மாறுகிறார், இதனால் அவர்களைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள அது உதவியாக இருக்கிறது. அவர் சில போலந்து மொழிப்பாடங்களையும் கற்பிக்கிறார்.
- ✓ அவரது வகுப்பறை வழக்கமான ஒன்றல்ல. பல்வேறு பின்னணிகள் மற்றும் நம்பிக்கை முறைகளிலிருந்து வருகிற மாணவர்கள் அங்கு படிக்கிறார்கள். அட்வென்டிஸ்ட், கத்தோலிக்கர், கால்வினிஸ்ட், நாத்திகர், பௌத்தர், ஹரேகிருஷ்ணா எனப் பலதரப்பு மாணவர்கள் உள்ளனர். சிலர் மறுபிறவிபற்றியும் வெளிப்படையாகப் பேசுகிறார்கள். சிறப்புக் கல்வி தேவைப்படுகிற பல மாணவர்களும் உள்ளனர். இத்தகைய சூழல் சில ஆசிரியர்களைத் தயக்கமடையச் செய்யக்கூடும். ஆனால் மோனிகா இதைக் கண்டு கவலைப்படவில்லை.
- ✓ “நீங்கள் அப்படியே முன்னேறிச் செல்லவேண்டும்” என்று கூறினார். வகுப்பு ஆசிரியையாக அவர் தனது பணியைத் தொடங்கியபோது, ஒரு முக்கிய சவாலை உணர்ந்தார்: அதாவது, வேதாகம வகுப்பு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்றால், மாணவர்கள் முதலில் வேதாகமத்தை நம்பவேண்டும். எனவே பரிச்சயமான கதைகளுடன் தொடங்குவதற்குப் பதிலாக, கேள்விகளுடன் தொடங்கினார்.



- ✓ வேதாகமம் தன்னை அதிகாரமுள்ளதெனச் சொல்லுவதற்கான காரணத்தையும், வேதாகமம் தன்னை ஒளி, உண்மை, ஜீவவார்த்தை என்று விவரிப்பதற்கான காரணத்தையும் கிட்டத்தட்ட ஒரு மாதமாக மாணவர்களுக்கு நடத்தினார். மாணவர்கள் தினமும் தங்களுடைய வேதாகமங்களைத் திறந்து, வசனங்களை வாசித்து, வேதாகமம் தன்னைப்பற்றி என்ன சொல்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தனர்.
- ✓ “நாங்கள் வேதாகமத்தைத் திறக்காத நாளே இருக்கக்கூடாது என்று முயற்சி செய்கிறோம். மேலும் நாங்கள் சொல்வது வேதாகமத்திலிருந்துதான் வருகிறது என்பதை எப்போதும் தெளிவாக விளக்குகிறோம்” என்று மோனிகா சொன்னார்.
- ✓ அந்த அணுகுமுறையை அவர் கையாளவதற்கு அவரால் மறக்கவேமுடியாத ஒரு தருணம்தான் காரணம். பள்ளியின் முதல்நாளில், அன்றைக்கான நிகழ்ச்சிகள்பற்றி அவர் சொல்லிக்கொண்டிருந்தபோது, ஒரு சிறுவன் தன் கையை உயர்த்தி, “நீங்கள் சபையை நம்பாமல் தேவனைமட்டும் நம்பமுடியுமா?” என்று கேட்டான். அது ஒரு சாதாரண கேள்வி அல்ல. வீட்டிற்குச் சென்று அதைப்பற்றி நீண்ட நேரம் யோசித்தார் மோனிகா. இறுதியாக, அதற்கு எப்படிப் பதிலளிக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டார்.



- ✓ “ஆம், நான் பல ஆண்டுகளாக சபையை நம்புகிற ஒரு நபராகத்தான் இருந்தேன்” என்று அவனிடம் சொன்னார். அந்தப் பதில் இன்னும் ஆழமான ஒன்றிற்கு கதவைத் திறந்துவிட்டது.
- ✓ சந்தேக உணர்வு எவ்வளவு தீவிரமானது என்பது மோனிகாவுக்கு நன்றாகப் புரியும், ஏனென்றால் அதைத் தன் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறார். அவரது அப்பா மதத்தை பகிரங்கமாக ஏளனம் செய்கிற ஒரு நாத்திகவாதி. தன் அப்பாமீது இருந்த அன்பினால், அவரும் அப்பாவின் கருத்துகளையே ஏற்றுக்கொண்டார். பதின்ம வயதிலும், விசுவாசம் என்பது ஒரு மாயை என்றே நம்பினார்; ஆனால் ஒரு அமைதியான மாலைப்பொழுதில் எல்லாம் மாறியது.
- ✓ தனது பதினாறாவது வயதில் ஓர் இரவில், தன் மேஜையில் தனியாக அமர்ந்திருந்தபோது, இந்த உலகத்தைப்பற்றியும் அது எப்படி இயங்குகிறது என்பதைப்பற்றியும் யோசிக்கத் தொடங்கினார். ‘இது தானாகவே நடந்திருக்க முடியாது’ என்பதை உணர்ந்தார். அந்த இருட்டில், தன் வாயால் முணுமுணுக்க ஆரம்பித்தார்; அதுதான் தன்னுடைய முதல் ஜெபம் என்று உணர்கிறார்: ‘சர்வவல்லமையுள்ள ஒருவர் இருந்தால், அவர் தம்மை எனக்குக் காட்டட்டும்’ என்பதே அந்த ஜெபம். அந்த ஜெபம் கதவைச் சற்றே திறந்து வைத்தது.



- ✓ புத்தகங்கள், நட்புகள் மற்றும் எதிர்பாராத சந்திப்புகள் மூலமாக தேவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பதிலளித்தார். பிறகு முதன்முதலாக ஒரு வேதாகமத்தை வாங்கி, அதை வாசிக்காமல் ஒரு அலமாரியில் வைத்திருந்தார். பின்னர், போலந்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் இறுதி ஆண்டுகளில், விசுவாசத்தைத் தேடிக்கொண்டிருந்த நண்பர்கள்மூலமாக, கூட்டங்களில் கலந்துகொள்ளவும், கேள்விகள் கேட்கவும், வேதாகமத்தை திறந்து வாசிக்கவும் தொடங்கினார்.
- ✓ சில பாதைகள் அவரைத் தவறான இடத்திற்கு வழிநடத்திச் சென்றன. சில பாதைகள் உண்மையோடு கலந்த தவறுகளை வெளிப்படுத்தின. ஆனால் வேதாகமத்தை நம்பலாம், மேலும் இயேசு உண்மையானவர் என்கிற விஷயம் தெளிவாகத் தெரிந்தது.
- ✓ இறுதியில், மோனிகா வார்சாவில் நடந்த அட்வென்டிஸ்ட் நற்செய்தி கூட்டங்களில் கலந்துகொண்டார். தான் அறிந்திராத பல வேதாகமப் போதனைகளைக் கற்றுக்கொண்டார். இறுதியாக, மேல்நிலைப்பள்ளித் தேர்வுகள் முடிந்த உடனேயே, ஜூன் மாதத்தில் ஒரு நாளில் ஞானஸ்நானம் பெற்றார்.
- ✓ அந்தப் பயணம் அவரது வாழ்க்கையை மாற்றியது. அது அவரது பாடம் நடத்துகிற முறையையும் வடிவமைக்கிறது.



- ✓ “மாணவர்கள் கடினமான கேள்விகளைக் கேட்கும்போது, நான் பயப்படுவதில்லை, ஏனென்றால், நானும் அதே சூழ்நிலையைக் கடந்து வந்தவள்தான்” என்று கூறினார் மோனிகா.
- ✓ இன்று, அவரது மாணவர்கள் பலர் அடிப்படையான வேதாகமத் கதைகள்கூடத் தெரியாமல் வருகிறார்கள். மோனிகா அந்தக் கதைகளை அவர்களுக்குச் சொல்கிறார்; வேதாகமத்தின் மீது நம்பிக்கையையும் உருவாக்குகிறார்.